# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2007 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சமூக மீட்டெடுப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 5 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*


*2007, யூலை மாதம் 6 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 10.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சமூக மீட்டெடுப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 5 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.*]

*ச.வ.ஓ. கூட் 11/2005*

**சமூக மீட்டெடுப்பு மற்றும் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

"சமூக மீட்டெடுப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான மன்றம் ஒன்று அதன் உறுப்பினர் களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப் பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்க ளுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அத்துடன் அதனைக் கூட்டிணைக்க விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, "சமூக மீட்டெடுப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)" சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சமூக மீட்டெடுப்பு மற்றும் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சமூக மீட்டெடுப்பு மற்றும் அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துரு வாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத் தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத் தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "சமூக மீட்டெடுப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலா

மென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன் படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) ஆரோக்கியமான வாழ்க்கை முறையினையும் மற்றும் உடல், உள, உணர்வுபூர்வ, உளவியற் சமூக மற்றும் உயர்மட்ட உளநல வாழ்க்கை முறையினையும் ஊக்கப் படுத்துவதன் மூலம் ஆளொருவரின் மீட்டெடுப்பு, வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்காக உழைத்தல் ;

(ஆ) வெவ்வேறு வயதுப் பிரிவினர்களைச் சேர்ந்த உளவியல், சமூக ரீதியாகப் பாதிக்கப்பட்டோர், உளவியல் ரீதியாக மன அதிர்ச்சிக்குட்பட்டோர், உடல் அத்துடன் அல்லது உளரீதியாக ஊனமுற்ற தனியாட்கள் ஆகியோரின் நலன் கருதி "சஹன செவன" என அழைக்கப்படும் பராமரிப்பு, புனர்வாழ்வு, மீட்டெடுப்பு மற்றும் நிவாரண இல்லமொன்றைப் பேணுதல் ;

(இ) உளவியல், சமூக ரீதியாகப் பாதிப்புற்ற ஆட்களையும், சிறுவர்களையும், தற்கொலைகளைத் தடுத்தலையும் பற்றிய கற்கை நிகழ்ச்சித் திட்டங்களையும், ஆய்வுப் பணிகளையும் மேற்கொள்ளுதலும் மற்றும் அத்தகைய ஆட்களினதும் மொத்தத்தில் சமுதாயத்தினதும் நலன்கருதி இயைபான அதிகாரிகளுக்கும் கொள்கையை வகுப்பவர்களுக்கும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அனுப்பிவைத்தல் ;

(ஈ) வெவ்வேறு உளவியல் மற்றும் சமூக நெறிமுறைகள், உள நிவாரணப் பணி, புனர்வாழ்வு, ஆலோசனை வழங்கல், வழிகாட்டல் என்பன தொடர்பில் கல்வியையும் அறிவையும் பரப்புதல் ;

(உ) அத்தகைய ஆட்களின் வாழ்க்கையில் இலட்சியத்தை ஏற்படுத்தற்பொருட்டும் தற்கொலைகளைத் தடுத்தல், ஆளுமை வளர்ச்சி மற்றும் தன்னம்பிக்கையை என்பவற்றை மேம்படுத்தல் என்பவற்றிக்காகவும் வறியவர்களான சிறுவர்கள், வாலிபப் பருவத்தினர், இளைஞர்கள், வளர்ந்தோர் மற்றும் முதியோர் ஆகியோரின் நன்மைகருதி உளத்துயர் தீர்த்தல், ஆலோசனை வழங்கல், வழிகாட்டல் நிலையங்கள் என்பவற்றிக்கான நிலையங்களை நிறுவுதல் ;

(ஊ) இலங்கையில் வாழும் சமூகங்களிடையே சமாதானம், நல்லிணக்கம், மானுட தார்மீக விழுமியங்களின் மேம்பாடு என்பவற்றை இயலுமானதாக்கும் நோக்குடன் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் குறைந்த பட்சம் உரையாடுவதற்கான திறனையாவது அடைவதற்கு இனக்குழுக்களை ஊக்கப்படுவத்துதல் மற்றும் நான்கு பிரதான மதங்களையும் பற்றி அறிவதற்கான விழிப்புணர்வை உயர்த்துதல் ;

(எ) மக்களின் பொருளாதாரத் தரங்களை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களது பிரதான வருமான மூலங்களுக்கு மேலதிகமாக, வீட்டைத் தளமாகக் கொண்ட வருமானம் உண்டுபண்ணும் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இளைஞர்களையும் மற்றும் குடும்பங்களையும் ஊக்குவித்தல்.

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குவதற்கும், மூடுவதற்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப் பின்றிப் பணங்களைக் கடனாகப் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வ

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

தற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையில் ஈடுபடுத்துவதற்கும், வேலைக்கமர்த்துவதற்கும், வேலையிலிருந்து நீக்குவதற்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்குமிணங்க, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்றுக்குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் செய்யப்படும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் நிறைவேற்றுக்குழுவே கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழுவாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) பொதுக்கூட்டம் எதிலும், சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு, கீழ்காணும் விடயங்களில் எவற்றுக்காகவும் அல்லது எல்லாவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், வகுப்பாக்கம் செய்தல், பதவி விலகல் அல்லது விலக்குதல் ;

(ஆ) பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவியிலிருந்து நீங்குதல் அல்லது பதவியை வறிதாக்கல் அல்லது பதவி நீக்குதல், அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(இ) நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்களின் தத்துவங்கள், நடத்தைகள் மற்றும் கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தினதும், நிறைவேற்றுக் குழுவினதும் கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுகையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்களின் நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல், அவற்றிற்கான கூட்டநடப்பெண் மற்றும் அவற்றில் அலுவல்களை கொண்டு நடாத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பு, கணக்குகளின் பேணுகை மற்றும் கணக்காய்வு ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதைப்போன்று அதே போன்ற கூட்டத்திலும் மற்றும் அதேபோன்ற முறையிலும் திருத்தப் படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்மைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**7**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரிதாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும், தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனமும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்திற்குச் செல்மதியாகவுள்ளனவும், அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான தனிசுகள்.

**8.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று மன்றத்திற்கு இருந்து வந்த எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள் உதவுதொகை கள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டானது ஒவ்வோராண்டும் ஏப்பிறல் 1 ஆம் திகதியில் தொடங்கி அடுத்துவரும் ஆண்டின் மாச்சு 31 ஆம் திகதியில் முடிவடைகின்ற ஆண்டாதல் வேண்டும் ;

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல், வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும் ;

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது—

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின்

உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் தலைவர் முன்னிலையிலன்றி அல்லது அவர் சமுகமாயில்லையெனில் அதன் துணைத் தலைவர் ஒருவர் அத்துடன் பொருளாளர் அல்லது செயலாளர் என்போரின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதனது எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையுமான வேறேதேனும் நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களிற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், வேறு எவரேனும் ஆட்களின் உரிமையையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*